நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வறட்சியின் பிடியில் சிக்கியது அமராவதி அணை: கோடையை தாக்குப் பிடிக்குமா?**

First Published : 21 Mar 2011 09:22:48 AM IST

உடுமலை, மார்ச் 20: 90 அடி கொள்ளளவு கொண்ட அமராவதி அணையின் நீர்மட்டம் தற்போது 11 அடி என்று அதல பாதாளத்திற்குச் சென்று விட்டது. இதனால் நூற்றுக் கணக்கான வழியோரக் கிராமங்கள் கோடையின் பிடியில் சிக்கித் தவித்து வருகின்றன.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் வரையில் மூன்று மாவட்டங்களில் உள்ள நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும் நூற்றுக் கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்குகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த தொடர் கனமழையால் அணை முழுக் கொள்ளளவை எட்டியது. அதன் பிறகும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்தது. ஆனால் உள்வரத்தாக வந்த நீரை அணையில் சேமிக்க முடியாமல் போனது. இதனால் 3 டிஎம்சி தண்ணீர் அணையில் இருந்து வெளியேற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து பழைய, புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஜனவரி, பிப்ரவரி இரண்டு மாதங்கள் தொடர்ந்து பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் சென்று கொண்டிருந்த நிலையில் படிப்படியாக அணையின் நீர்மட்டம் சரியத் தொடங்கியது. சின்னாறு, தேனாறு, பாம்பாறு போன்ற அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து அணைக்கு வரும் உள்வரத்து முற்றிலும் நின்று போனது.

இந்நிலையில், இந்த ஆண்டு வழக்கத்தை விட மார்ச் முதல் வாரத்திலேயே கோடை தொடங்கியது. வழக்கமாக பாசனப் பகுதிகளுக்கு மார்ச் 31 வரை பாசன காலம் உள்ள நிலையில் தற்போது அணையின் நீர்மட்டம் அதல பாதாளத்திற்குச் சென்று விட்டது.

சனிக்கிழமை காலை அணையின் நீர்மட்டம் வெறும் 11.26 அடியாக இருந்தது. இதனால் அணையின் உள்பகுதி பாளம் பாளமாக வெடித்து, வறட்சியைக் காட்டிக் கொண்டிருந்தது. மார்ச் இறுதி வரை இன்னமும் பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்க வேண்டிய நிலையில் அணையின் நீர் இருப்பு விவசாயிகளை கவலை கொள்ளச் செய்து வருகிறது.

குறிப்பாக கோடை காலத்தை தாக்குப் பிடிக்க முடியுமா என நூற்றுக் கணக்கான கரையோர கிராம மக்கள் கவலை அடைந்து வருகின்றனர். இது குறித்து பொதுப்பணித் துறையினர் ஞாயிற்றுக்கிழமை கூறியது:

தற்போது 'சில்ட்' எனப்படும் 15 அடி தண்ணீரை கழித்து விட்டு பார்த்தால் அணையில் 11 அடி தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. ஆனாலும் மார்ச் 31 வரை பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்க வேண்டியுள்ளது. அப்படி வழங்கும் பட்சத்தில் அணை முற்றிலும் வறண்டு போய் விடும். ஆகையால் வரும் கோடைக் காலத்தை சமாளிக்க முடியாது. இந்நிலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்தால் ஒழிய கோடையை சமாளிக்க முடியாது என்றனர்.
அணை நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் 11.26 அடியே நீர்இருப்பு உள்ளது. 4,035 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட அணையில் 319.72 மில்லியன் கன அடி நீர் இருப்பே காணப்படுகிறது. அணைக்கு உள்வரத்தாக 7 அடியும், அணையில் இருந்து ஆற்றின் மூலம் 200 அடி, நீர் இழப்பு 9 அடி என 209 கனஅடி தண்ணீர் வெளியேற்றமாக உள்ளது.

**கோடை காலத்தில் வனவிலங்குகள் இடம்பெயர்வதைத் தடுக்க நடவடிக்கை**
First Published : 21 Mar 2011 10:07:56 AM IST

கம்பம், மார்ச் 20:கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி மேற்கு தொடர்ச்சி மலையில் கோடை காலத்தில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையால் வன விலங்குகள் இடம்பெயர்வதைத் தடுக்க, வனத் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.
கம்பம், கூடலூர் உள்ளிட்ட வனச் சரகங்களில் சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் வனவிலங்குகளின் எண்ணிக்கை திருப்திகரமாக இல்லை. வனவிலங்குகளுக்குத் தேவையான வசதிகள் குறையும்போது, அவை இடம்பெயர்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன. கோடை காலத்தில் புற்கள் வறண்டுவிடும் என்பதால், மான்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்கின்றன. அதை உணவாக உண்ணும் புலிகளும் இடம்பெயருவதற்கான சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றன.
மேலும், வனப் பகுதியில் உள்ள ஓடைகள், குளங்களில் தண்ணீர் வற்றிவிடும் என்பதால், குடிநீருக்காக மான்கள், யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள் ஊருக்குள் வந்து விடுகின்றன.

இதைத் தடுக்க வனப் பகுதிகளில் கோடை காலத்திலும் தண்ணீர் கிடைக்கும் வகையில் தாற்காலிக ஏற்பாடுகளை வனத்துறையினர் செய்து வருகின்றனர். இதற்கென குளங்கள் வெட்டப்பட்டு, அதில் தண்ணீரை லாரிகளில் கொண்டு சென்று ஊற்றவும், தண்ணீர் ஊற்று காணப்படும் இடங்களில் பள்ளங்களை வெட்டித் தண்ணீரைத் தேக்கி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வனத் துறையினர் கூறியதாவது:குமுளி முதல் தேனி வரை சாலையின் கிழக்குப் பகுதியில் உள்ள வனப் பகுதிகள் வனவிலங்கு சரணாலயங்களாக மாற்றப்பட்டுவிட்டது.

எனவே, இப் பகுதியில் வனவிலங்குகளுக்கு தண்ணீர்ப் பிரச்னை இல்லாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம். மேலும், தீ தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளோம் என்றனர்.

தினமலர்

**மண்புழு கழிவு உரம்தயாரிப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 22,2011,01:08 IST

தென்காசி:செங்கோட்டை அருகே புதூரில் விவசாயிகளுக்கு மண்புழு கழிவு உரம் தயாரிப்பு பயிற்சி நடந்தது.செங்கோட்டை வட்டாரம் புதூரில் விவசாயிகளுக்கு மண்புழு கழிவு உரம் தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்து பேசும்போது, இயற்கை உரங்கள் பயன்படுத்தப்படுவதன் அவசியம் பற்றியும், இயற்கை உரங்கள் இடுவதால் மண் வளம் பெருகுவது பற்றியும்,நீர்பிடிப்பு தன்மை அதிகரிப்பது பற்றியும், பயனுள்ள நுண் கிருமிகள் பல்மடங்கு பெருகிறது பற்றியும் விளக்கினார்.மண்புழு கழிவு உரம் தயார் செய்யும் செயல் விளக்கத்தினை வேளாண்மை அலுவலர் ஜெயசுதா விளக்கினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மாரியப்பன், அமீன் செய்திருந்தனர்.

**நாகலாபுரத்தில் அதிசய தேன் கூடு : பொங்கி வரும் பொங்கல் பானை வடிவம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 22,2011,00:18 IST

புதூர் : புதூர் அருகே உள்ள நாகலாபுரம் சாமி அய்யா நாடார் மேல்நிலைப்பள்ளி சத்துணவு பாதுகாப்பு அறையில் பொங்கி வரும் பொங்கல் பானை வடிவத்தில் அதிசய தேன் கூடு அமைப்பை தேனீக்கள் உருவாக்கியுள்ளது.

பூச்சிகளில் தீமை தரும் பூச்சி இனம் மற்றும் நன்மை தரும் பூச்சி இனம் என இரண்டு வகைகள் உண்டு. இதில் நன்மை தரும் பூச்சி இனத்தை சேர்ந்தது தேனீ. இவைகள் மனிதனுக்கு பல்வேறு வகைகளில் உபயோகப்படும் தேன் என்ற மருந்து திரவத்தை உற்பத்தி செய்பவைகளில் முதலிடம் பெற்றுள்ளது. பொதுவாக தேனீக்கள் மரக்கிளைகள் மற்றும் மரபொந்துகளில் தேன் கூடுகளை தட்டு வடிவத்தில்தான் அதிகமாக உருவாக்கும். சில சமயங்களில் மிக வித்தியாசமான உருவ அமைப்புகளில் கூடுகள் உருவாக்குகிறது. சமீபத்தில் கூட கோயில் கொடிமரத்தில் வேல் வடிவம் மற்றும் மயில் வடிவ அமைப்புடன் கூடுகள் உருவாக்கி இருந்தது.

அந்த வகையில் நாகலாபுரம் சாமி அய்யா நாடார் மேல்நிலைப்பள்ளி சத்துணவு பாதுகாப்பு அறையில் கிழக்கு புற சுவர் ஓரத்தில் பொங்கல் பானை வடிவத்தில் அதிசய தேன் கூடு ஒன்றை தேனீக்கள் உருவாக்கி உள்ளது. இது பார்ப்பதற்கு மிக அழகாகவும், அதிசயமாகவும் உள்ளதாகவும் பள்ளி மாணவ, மாணவியர்கள் இதை கடந்த சில நாட்களாக பார்வையிட்டு வியந்து வருகின்றனர்.

**மரக்கன்று நடும் விழா**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,21:39 IST

சேத்தியாத்தோப்பு : சேத்தியாத்தோப்பை அடுத்துள்ள சோழதரத்தில் ரோட்டரி சங்கம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக என்.எஸ்.எஸ்., மாணவர்கள் இணைந்து நடத்திய மரக்கன்று நடும்விழா நடந்தது. ரோட்டரி சங்கத் தலைவர் வேல்முருகன் தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர் பழனிசாமி, என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர்கள் வாசுதேவன், மணிவாசகம் முன்னிலை வகித்தனர். ரோட்டரி சங்க மரம் வளர்ப்புத்துறை சேர்மன் ஹஜ்ஜி முகமது வரவேற்றார். தேர்வுத் தலைவர் டாக்டர் பாண்டியன் மரக்கன்றுகள் நடும் விழாவை துவக்கி வைத்தார். சோழதரம் உயர்நிலைப் பள்ளி, புடையூர் துவக்கப் பள்ளிகளில் என்.எஸ்.எஸ்., மாணவர்கள் மரக்கன்றுகளை நட்டனர்.

**நெல் கொள்முதல் நிலையத்திற்கு குறைவாக பணம் ஒதுக்கீடு: விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,21:40 IST

நடுவீரப்பட்டு : சி.என்.பாளையம் ஊராட்சியில் உள்ள அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு பணம் குறைவாக ஒதுக்கீடு செய்வதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு

வருகின்றனர். பண்ருட்டி அடுத்த சி.என்.பாளையம் ஊராட்சியில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது. இப்பகுதியைச் சுற்றி விவசாயிகள் அதிகமான அளவில் நெல் பயிரிட்டு வருகின்றனர். இந்த நெல் கொள்முதல் நிலையத்திற்கு நாள் ஒன்றுக்கு 500க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இம்மையத்திற்கு தற்போது 50 ஆயிரம் ரூபாய் மட்டும் தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் தங்களது நெல்லை விற்க முடியாமல் தனியார் வியாபாரிகளை நாடிச் செல்லக்கூடிய நிலை உள்ளது. மேலும் இந்த மையத்தில் 20க்கும் மேற்பட்ட சுமை தூக்கும் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். குறைந்த அளவு பணம் ஒதுக்கீட்டால் நெல் மூட்டைகளை அதிகளவு ஏற்றி இறக்க வழியில்லாததால் சுமை தூக்கும் தொழிலாளர்கள் போதிய வருமானம் இன்றி அவதிப்படுகின்றனர். அதிகாரிகள் அதிகப்படியான பணம் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தேர்தல் வரை நெல் கொள்முதல் நிறுத்தம் அரிசி ஆலை உரிமையாளர்கள் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,22:01 IST

கள்ளக்குறிச்சி : நெல் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களின் சிறப்பு கூட்டம் கள்ளக்குறிச்சியில் நடந்தது.
கூட்டத்திற்கு மாநில சம்மேள துணை தலைவர் அப்துல் ரகீம் தலைமை தாங்கினார். கள்ளக்குறிச்சி, சின்னசேலம் நெல் மற்றும் அரிசி ஆலை தேர்வு தலைவர்கள் கந்தசாமி, குணசேகரன் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம், கச்சிராயப்பாளையம், தியாகதுருகம் பகுதிகளைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்கள் பலர் கலந்து கொண்டனர். மாநில சம்மேள துணை தலைவர் அப்துல் ரகீம் நிருபர்களிடம் கூறியதாவது: விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த வியாபாரிகள் தங்கள் நெல் மற்றும் அரிசி விற்ற பணத்தை எடுத்து வரும் போது அதிகாரிகள் சோதனை செய்து பறிமுதல் செய்தனர். மார்க்கெட் கமிட்டி மற்றும் கிராம விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்ய முடியாத நிலை உள்ளது.

கடந்த 4 நாட்களுக்கு முன்பு கலெக்டர் மற்றும் டி.ஆர்.ஓ.,வை சந்தித்து அரிசி ஆலை உரிமையாளர்களிடம் பணம் பறிமுதல் செய்தால் மார்க்கெட் கமிட்டியில் நெல் கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்படுமென கூறினோம். அதன் பின்பு அரிசி விற்ற பணம், நெல் கொள்முதல் பணம் அனுப்பும் ஆதாரங்களுக்கு கடிதம் அனுப்புமாறு அதிகாரிகள் தெரிவித்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணிக்கு கள்ளக்குறிச்சி நான்கு முனை சந்திப்பில் சோதனையில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் இரு வியாபாரிகள் கொண்டு வந்த 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு ஆதார கடிதம் காட்டியும் பறிமுதல் செய்ய முயன்றனர். இருவரும்

டி.ஆர்.ஓ.,வை தொடர்பு கொண்ட பிறகு விடுவிக்கப்பட்டனர். இச்சூழ்நிலை மீண்டும் தொடர்ந்தால் மாவட்டம் முழுவதும் தேர்தல் முடியும் வரை நெல் கொள்முதல் செய்வது நிறுத்த முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அப்துல் ரகீம் கூறினார்.

**புதிய பருத்தி ரகம் கண்டு பிடிக்க வேண்டும்:சர்வதேச பருத்தி கழக தலைவர் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,22:17 IST

கோவை : "புதிய பருத்தி ரகம் கண்டுபிடிப்பது மட்டுமே, கச்சாப்பருத்தியின் விலை சர்வதேச அளவில் குறைவதற்கான வாய்ப்பாக அமையும்,' என சர்வதேச பருத்திக் கழக தலைவர் ரே பட்லர் தெரிவித்தார்.தென்னிந்திய பருத்திக் கழகம் (சைகா), தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம் (சைமா) சார்பில், பருத்தி குறித்த கருத்தரங்கு கோவை, ரெசிடென்சி ஓட்டலில் நேற்று நடந்தது.

இதில், இங்கிலாந்து லிவர்பூல் சர்வதேச பருத்திக் கழக தலைவர் ரே பட்லர் பேசியதாவது: அக்.முதல் செப்.,வரையிலான ஆண்டு பருத்தி ஆண்டாக கணக்கிடப்படுகிறது. 2011-2012ம் பருத்தி ஆண்டில், சர்வதேச அளவில் மொத்த பருத்தி உற்பத்தி 2.76 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம் நுகர்வு 2.64 கோடி டன்னாக இருக்கும். கடந்த ஆண்டில், பருத்தி நுகர்வின் அளவில் 10 சதவீதம் பாலியஸ்டருக்கு திரும்பி விட்டது. வரும் ஆக., மாதத்தில் உபரி பருத்தி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய பருத்தி ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான், உலகளவிலும், இந்தியாவிலும் கச்சாப்பருத்தியின் விலை குறையும்.

சர்வதேச பருத்திக் கழகம், பருத்தி தொடர்பான சிக்கல்களில் கவனம் செலுத்துகிறது. பருத்தி சார்ந்த தொழில் அமைப்புகளோடு இணைந்து செயல்படுகிறது. இதில் ஏற்படும் வழக்குகளை தீர்ப்பாயம் மூலம் சரி செய்கிறது. சர்வதேச பருத்திக்கழகத்தில் பருத்தி தொடர்பான அமைப்புகள் உறுப்பினராக இணைந்து செயல்படலாம். இவ்வாறு, ரே பட்லர் பேசினார். சர்வதேச பருத்தி கழக நிர்வாக இயக்குனர் கய் ஹ்யூகஸ், முதல் துணைத்தலைவர் ஆன்டேனியோ எஸ்தேவ், இயக்குனர் மோகித் ஷா, சைமா தலைவர் துளசிதரன், சைகா துணைத்தலைவர் ரவிச்சந்திரன், செயலர் விஸ்வநாதன், இணைச்செயலர் ரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

குன்னூர் தேயிலை ஏலத்தில் தொடர்கிறது விலை வீழ்ச்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,22:54 IST

குன்னூர் : தேயிலை ஏல விலையில் தொடர் சரிவு ஏற்பட்டு வருகிறது.குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 11க்கான ஏலம் நடந்தது. மொத்தம் 10.57 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 7.46 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.11 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில், வழக்கமாக பங்கெடுக்கும் பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு இந்த வாரமும் குறைந்தது. கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் உட்பட வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பும் குறைந்ததால், அனைத்து ரக தூளின் விலையும் கிலோ 3 ரூபாய் சரிந்தது; விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 33 சதவீதம் தேங்கியது.

சி.டி.சி., ரக விற்பனையில் கோத்தகிரி விக்னேஸ்வர் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 171 ரூபாய் விலை கிடைத்தது; 75க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன; ஆர்தோடக்ஸ் ரகத்தில் கர்சன் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 181 ரூபாய் விலை கிடைத்தது; 27க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.
இலை ரக விற்பனையில் சாதாரண ரக தூளுக்கு 48 - 54, சிறந்த ரக தூளுக்கு 85 - 130 ரூபாய், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 50-55, சிறந்த ரக தூளுக்கு 85 - 135 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 12க்கான ஏலம் வரும் 24, 25 தேதிகளில் நடக்கவுள்ளது. மொத்தம் 11.26 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்குள் ளது; இலை ரகம் 8.31 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.25 லட்சம் கிலோவும் அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 69 ஆயிரம் கிலோ அதிகம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## விலை உயர்வை கட்டுப்படுத்த புதிய பருத்தி பயிர் ரகங்களை அறிமுகம் செய்ய வேண்டும் சர்வதேச பருத்தி கழக தலைவர் ராய் பட்லர் பேச்சு




கருத்தரங்கில், சர்வதேச பருத்தி கழக தலைவர் ராய் பட்லர் பேசிய போது எடுத்த படம். அருகில் சர்வதேச பருத்தி கழக நிர்வாக இயக்குனர் காய் ஹியூக்ஸ், முதன்மை துணைத்தலைவர் ஆண்டனியோ எஸ்டீவ், இயக்குனர் மோகித் ஷா, சைமா தலைவர் துளசிதரன் ஆகியோர் உள்ளனர்.

*கோவை,மார்ச்.22–*

*பருத்தி விலை உயர்வை கட்டுப்படுத்த புதிய பயிர் ரகங்களை அறிமுகம் செய்ய வேண்டும் சர்வதேச பருத்தி கழக தலைவர் ராய் பட்லர் கூறினார்.*

**கருத்தரங்கம்**

*கோவையில் உள்ள தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம்(சைமா), தென்னிந்திய பருத்தி கழகம்(சைகா) சார்பில், சர்வதேச கருத்தரங்கம் கோவை அவினாசி ரோட்டில் உள்ள ரெசிடென்சி ஓட்டலில் நேற்று நடைபெற்றது.*

*கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவரையும் சைகா துணைத்தலைவர் ரவிச்சந்திரன் வரவேற்றார்.சைமா தலைவர் துளசிதரன் கருத்தரங்கை தொடங்கி வைத்து இந்திய ஜவுளி உற்பத்தி என்ற தலைப்பில் பேசினார்.*

**உலக பருத்தி உற்பத்தி**

*சைகா இணைச்செயலாளர் ரமணி இந்திய பருத்தி உற்பத்தி என்ற தலைப்பில் பேசினார். சர்வதேச பருத்தி கழக தலைவர் ராய் பட்லர் உலக பருத்தி உற்பத்தி என்ற தலைப்பில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*பருத்தி உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், அமெரிக்கா 2–வது இடத்திலும், இந்தியா 3–வது இடத்திலும், பாகிஸ்தான் 4–வது இடத்திலும் உள்ளன. பருத்தி உற்பத்தி உலக அளவில் அதிகரித்து வருகிறது.*

**உற்பத்தி அதிகரிப்பு**

*அதன்படி வருகிற 2011–2012 பருத்தி காலண்டர் ஆண்டில் உலக பருத்தி உற்பத்தி 27.6 மில்லியன் டன்னாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இது நடப்பு ஆண்டை விட 3 மில்லியன் டன் அதிகம் ஆகும்.*

*பருத்தி பயன்பாடு வரும் ஆண்டில் 26.4 மில்லியன் டன்னாக உயர வாய்ப்புகள் உள்ளன. சர்வதேச அளவில் பருத்தி பயன்பாட்டில் 10 சதவீதம் பாலியஸ்டர் வசம் சென்று உள்ளதாக கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.*

**புதிய பருத்தி பயிர்கள்**

*பருத்தி விலை 2 மடங்காக உயர்ந்து உள்ளது. இதை கட்டுப்படுத்த புதிய பருத்தி பயிர்களை அறிமுகப்படுத்த வேண்டும். அவ்வாறு புதிய பயிர்களை அறிமுகம் செய்தால்தான் பருத்தி விலை குறைய வாய்ப்புகள் உருவாகும்.*

*இவ்வாறு ராய் பட்லர் கூறினார்.*

*கருத்தரங்கில், சர்வதேச பருத்தி கழக நிர்வாக இயக்குனர் காய் யூக்ஸ், முதன்மை துணைத்தலைவர் ஆண்டனியோ எஸ்டீவ், இயக்குனர் மோகித் ஷா மற்றும் தொழில் அதிபர்கள், நூற்பாலை உரிமையாளர்கள், பருத்தி உற்பத்தியாளர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் சைகா செயலாளர் விஸ்வநாதன் நன்றி கூறினார்.*

## தேயிலை செடிகளை வறட்சியில் இருந்து பாதுகாப்பது எவ்வாறு? தேயிலை வாரியம் விளக்கம்

*குன்னூர், மார்ச்.22–*

*தேயிலை செடிகளை வறட்சியில் இருந்து பாது காப்பது எப்படி என்பது குறித்து தேயிலைவாரியம், உபாசி விளக்கம் அளித்துள்ளது.*

**வெயிலின் தாக்கம்**

தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து தேயிலை செடிகளை வறட்சியில் இருந்து பாதுகாப்பது எவ்வாறு என்ற செய்தி குறிப்பை வெளியிட்டு உள்ளன. அதில் கூறி இருப்ப தாவது:-

பொதுவாக நீலகிரி மாவட்டத்தில் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். இந்த மாதங்களில் மழை பெய்யும் வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருப்பதால் தேயிலை செடிகள் வறட்சியின் பாதிப்பிற்கு உள்ளாகின் றன.

எனவே இந்த மாதங்களில் எளிய முறைகளின் மூலம் தேயிலை செடிகளை வறட்சி யில் இருந்து பாதுகாக்க லாம். புதிதாக நடவு செய்யப்பட்ட இளம் தேயிலை தோட்டங் களில் நாற்றுக்கள் அதிக வெயில் காரணமாக காய்ந்து விடும் வாய்ப்பு உள்ளது. இதற்கு சில விவசாயிகள் மண்ணின் மேற்பரப்பில் தண்ணீர் ஊற்றி வருகின்றனர். இதனால் வேர்கள் மேல் நோக்கி வளர்ந்து அதிக பாதிப் பிற்கு உள்ளாகும். இதனை தவிர்க்க அடிமண் நீரூற்று கருவியை பயன்படுத்தி அடிமண் நீரூற்ற வேண்டும்.

**சாம்பல் சத்து**

இந்த முறையை விடுத்து அடுத்த முறையாக கடப் பாறையை கொண்டு செடியில் இருந்து சற்று தள்ளி 6 அடி அங்குலத்தில் குழி எடுத்து அந்த குழிக்குள் நீரை ஊற்ற வேண்டும். மேலும் 100 லிட்டர் தண்ணீரில் 12 கிலோ கயோ லின் பவுடர் 330 மில்லி வினோபான் கலந்து கைத் தெளிப்பான் மூலம் இலைகள் முழுவதும் நன்கு நனையும் படி தெளிக்க வேண்டும்.

இலை பறிக்கும் மற்றும் கவாத்து தோட்டங்களுக்கு தழை மற்றும் சாம்பல் சத்து தெளித்து வறட்சியில் இருந்து பாதுகாக்கலாம். தழைச் சத்திற்கு யூரியாவையும், சாம்பல் சத்திற்கு முயூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் பயன்படுத்தலாம்.

இத்துடன் நீராவி போக்கை கட்டுப்படுத்த கிரின் மிராக்கிள் என்ற மருந்தையும் சேர்த்து தெளிக்கலாம். இந்த கலவையை இலைகள் முழுவதும் நன்கு வரும்படி தெளிக்க வேண்டும். யூரியா 100 கிராம், மூயூரியேட் ஆப் பொட்டாஷ் 100 கிராம் மற்றும் கிரின் மிராக்கிள் 20 மில்லியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள் ளது.

## ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான ஒன்பது மாத காலத்தில் அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி 8.1 சதவீதம் உயர்வு



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல் – டிசம்பர் மாத காலத்தில் அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி 8.1 சதவீதம் அதிகரித்து ரூ.52,492 கோடியாக உயர்ந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.48,548 கோடியாக இருந்தது.*

**உணவு தானியங்கள்**

*உணவு தானியங்கள், மோட்டார் வாகனங்கள், பால், பானங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் அத்தியாவசியப் பொருள்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இந்த பொருள்களின் இறக்குமதியை மத்திய அரசு பொதுவாக உன்னிப்பாக கவனிப்பது வழக்கம். அதாவது உள்நாட்டு பொருளாதாரத்தில் இது ஏதாவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறதா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.*

*டிசம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில் உணவு தானியங்கள் இறக்குமதி ரூ.226.54 கோடியாக அதிகரித்துள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.41.49 கோடி மதிப்பிற்கே தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. பால் மற்றும் பால் பொருள்கள் இறக்குமதி ரூ.232.83 கோடியிலிருந்து ரூ.724.17 கோடியாகவும், மோட்டார் வாகனங்கள் இறக்குமதி ரூ.806.23 கோடியிலிருந்து ரூ.1,659.28 கோடியாகவும் அதிகரித்துள்ளது.*

***சமையல் எண்ணெய்***

*முதல் ஒன்பது மாதங்களில், ஆல்கஹால் கலந்த பானங்கள் இறக்குமதி 48 சதவீதமும், ரப்பர் இறக்குமதி 110 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது. சமையல் எண்ணெய் இறக்குமதி ரூ.20,791 கோடியாக உயர்ந்துள்ளது. சிறு தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளான குடை, பூட்டு, பொம்மைகள், கண்ணாடி சாமான்கள் இறக்குமதி 54 சதவீதம் அதிகரித்து ரூ.1,128 கோடியாக உயர்ந்துள்ளது.*

*அதே சமயம் பருப்பு வகைகள், பருத்தி மற்றும் பட்டு இறக்குமதி சுமார் 26 சதவீதம் குறைந்துள்ளது. இதற்கான காரணம் தெரியவில்லை. மார்ச் 5–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவுப் பணவீக்கம் 9.42 சதவீதமாக உள்ளது. பழங்கள், பால் மற்றும் பருப்பு வகைகள் விலை உயர்ந்துள்ளதே இதற்கு காரணமாகும். ஏப்ரல் – டிசம்பர் மாத காலத்தில் நாட்டின் மொத்த இறக்குமதியில் அத்தியாவசியப் பொருள்களின் பங்களிப்பு 4.7 சதவீதமாக உள்ளது. இக்காலத்தில் நம் நாடு ரூ.11.27 லட்சம் கோடிக்கு பல்வேறு பொருள்களை இறக்குமதி செய்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.9.92 லட்சம் கோடியாக இருந்தது.*

***முக்கிய நாடுகள்***

*அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட காலத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, கொரியா, அர்ஜென்டினா, ஜெர்மனி, தாய்லாந்து, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி அதிகரித்துள்ளது. மியான்மர், பிரேசில், ஜப்பான் மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி குறைந்துள்ளது.*

## ***மார்ச்சுடன் நிறைவடையும் ஆண்டில் இயற்கை ரப்பர் உற்பத்தி 3.5 சதவீதம் அதிகரிக்கும்***



எஸ் சனந்தகுமார்

கொச்சி

*இந்தியாவில், நடப்பு நிதி ஆண்டில் இயற்கை ரப்பர் உற்பத்தி 3.5 சதவீதம் உயர்ந்து 8.63 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**பிப்ரவரி மாதத்தில்...**

சர்வதேச அளவில் விலை உயர்ந்து வருவதாலும், தேவைப்பாடு அதிகரித்து வருவதாலும் ரப்பர் தோட்டங்களில் பால் வடிப்பு பணிகள் உத்வேகம் பெற்று வருகின்றன. உற்பத்தி அதிகரித்து வருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். பிப்ரவரி மாதத்தில் ரப்பர் உற்பத்தி சுமார் 6 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. நடப்பு மார்ச் மாதத்திலும் உற்பத்தி இதே அளவிற்கு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வாகன டயர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இயற்கை ரப்பர் முக்கிய மூலப்பொருளாக உள்ளது. மோட்டார் வாகனங்கள் விற்பனை அதிகரித்து வருவதால் டயர்கள் உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. குறிப்பாக நடப்பு நிதி ஆண்டில் டயர் துறையில் அதிக அளவு ரப்பர் பயன்படுத்தப்பட்டுள்ளது. என்றாலும் நம் நாட்டில் ரப்பர் பயன்பாடு 1.9 சதவீதமே அதிகரிக்கும் என தெரிகிறது. டயர் அல்லாத துறைகளில் ரப்பர் பயன்பாடு குறைந்து போனதே இதற்கு காரணமாகும்.

பயன்பாடு அதிக வளர்ச்சி காண வாய்ப்பில்லை என்றாலும், நடப்பாண்டில் ரப்பர் பற்றாக்குறை 85,000 டன்னாக இருக்கும் என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். அதே சமயம் பற்றாக்குறை இதை விட அதிகமாக இருக்கும் என டயர் ஆலைகள் உள்ளிட்ட தொழில்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அடுத்த நிதி ஆண்டில் ரப்பர் பற்றாக்குறை 2 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

**விலை அதிகரிக்கும்**

பற்றாக்குறை உயர்ந்து வருவதால் ரப்பர் விலை தொடர்ந்து அதிகரிப்பதற்கான வாய்ப்புகளே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஜப்பானில் சுனாமி தாக்குவதற்கு முன்னர் சர்வதேச சந்தையில் ரப்பர் விலை சற்றே சரிவடைந்திருந்தது. சுனாமிக்குப் பிறகு ஒரு வார காலத்திற்கு விலையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டன. இப்போது ரப்பர் விலை மீண்டும் உயரத் தொடங்கியுள்ளது. ஏப்ரல், மே மாதங்களில் அளிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றாலும் நடுத்தர கால அடிப்படையில் விலை ஏறுமுகமாகவே இருக்கும் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மல்லி விளையும் பூமி



உணவு பொருட்களுக்கு அதிக மணம் கொடுப்பது மசாலா பொருட்கள். இந்த மசாலா பொருட்களில் முக்கிய இடம் வகிப்பது மல்லி. ஊட்டி அருகே கடநாடு கிராமத்தில் விளைந்த மல்லியை வெயிலில் விவசாயிகள் காய வைத்திருப்பதை படத்தில் காணலாம்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,790–2,800

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,400–3,500

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 7,350–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை (சாக்கு வரி உள்பட) 1,425–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட டின் (வரி உள்பட) 1,749–00

**நல்லெண்ணெய்**

குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்,
1 குவிண்டால் (வரி உள்பட) 11,500–00
டின் (15 கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 11,200.00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,700–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ டின் (வரி உள்பட) 1,135.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,295.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,095.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 565–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை, மார்ச்.21–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,500 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, மார்ச்.21–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1. விி.797 22எம்.எம் | ரூ. | 12,513 |
| 2. ஜெயதார் 22 எம்.எ | ரூ. | ——— |
| 3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. | 16,542 |
| 4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. | 15,747 |
| 5. சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. | 16,731 |
| 6. எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. | 16,591 |
| 7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. | 22,918 |

## கோவை உழவர் சந்தை

கோவை, மார்ச்.21–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 54–00 | காலிப்பிளவர் | ரூ. | 13–14 |
| கத்தரிக்காய் | ரூ. | 18–20 | பொறியல் தட்டை | ரூ. | 16–17 |
| வெண்டைக்காய் | ரூ. | 9–10 | பச்சை மொச்சை | ரூ. | 28–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5–6 | தேங்காய் | ரூ. | 13–00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6–6.50 | பட்டாணி | ரூ. | 40–42 |
| புடலை | ரூ. | 8–12 | பூண்டு | ரூ. | 110–120 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18–00 | கறிவேப்பிலை | ரூ. | 30–32 |
| சுரைக்காய் | ரூ. | 8–10 | அகத்தி | ரூ. | 14–00 |
| பாகற்காய் | ரூ. | 14–15 | வாழைக்காய் | ரூ. | 14–00 |
| கொத்தவரை | ரூ. | 14–00 | திராட்சை | ரூ. | 36–00 |
| பூசணிக்காய் | ரூ. | 15–16 | திராட்சை (பச்சை) | ரூ. | 60–65 |
| அரசாணிக்காய் | ரூ. | 10–00 | குடைமிளகாய் | ரூ. | 36–00 |
| மேராக்காய் | ரூ. | 16–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 16–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 32–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20–00 | கறிபீன்ஸ் | ரூ. | 24–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 16–17 | புஸ்பீன்ஸ் | ரூ. | 22–24 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10–00 | காளான் | ரூ. | 80–140 |
| இஞ்சி | ரூ. | 32–00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10–13 |
| முருங்கைக்காய் | ரூ. | 26–28 | சப்போட்டா 1 கிலோ | ரூ. | 16–00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 15–20 | கொய்யா 1 கிலோ | ரூ. | 22–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 20–00 | மாதுளை 1 கிலோ | ரூ. | 170–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 16–15 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | ஆப்பிள் | ரூ. | 110–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | சாத்துக்குடி | ரூ. | 28–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | நெல்லிக்காய் | ரூ. | 30–00 |
| முள்ளங்கி | ரூ. | 8–10 | ஆரஞ்சு | ரூ. | 40–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24–00 | வெள்ளரி | ரூ. | 12–26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 7–8 | புளி 1 கிலோ | ரூ. | 75–80 |
| நூல்கோல் | ரூ. | 16–00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32–00 |
| கொத்தமல்லி | ரூ. | 16–18 | அவரை | ரூ. | 10–11 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16–00 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 9–10 | மக்காச்சோளம் | ரூ. | 3–50 |
| கலர்கோஸ் | ரூ. | 14–00 | தர்பூசணி | ரூ. | 10–00 |
| புதினா | ரூ. | 16–00 | சீத்தாபழம் | ரூ. | 20–00 |

## எண்ணை மார்க்கெட்

கோவை, மார்ச்.21–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15 கிலோ) | (1 லிட்டர்) சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 84.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1160 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | (–) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1420 | 1020.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,700 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,000 | 59.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,200 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | – |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | குறைந்தபட்ச விலை | அதிகபட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.400.00 | ரூ. 450.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 2.00 | ரூ. 4.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.13.00 | ரூ.20.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.4.00 | ரூ.7.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.3.00 | ரூ.6.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.7.00 | ரூ.15.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.5.00 | ரூ.8.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.7.00 | ரூ.10.00 |
| மேராக்காய் | ரூ.5.00 | ரூ.8.00 |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.231.00 | அதிகபட்சவிலை | ரூ.255.00 |
| சராசரி விலை | ரூ.196.24 | சராசரி விலை | ரூ.230.45 |
| குறைந்தபட்சவிலை | ரூ.161.00 | குறைந்தபட்சவிலை | ரூ.215.00 |

**பட்டு நூல் ரூ.2,025**

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21600 |
| மிளகு (சேட்டன்) | ரூ.22000 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22800 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 6100 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 7800 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.10000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9000 |
| கொப்பரை நாடன் | ரூ.6125 |
| கொப்பரை ராசு | ரூ.6025 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6225 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ.6550 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6800 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21000 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22000 |
| ரப்பர் பால் | ரூ. 15000 |
| காப்பி | ரூ. 9400 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5150 |
| நேந்திர காய் | ரூ. 1350 |
| இஞ்சி | ரூ. 1400 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,624.00 | 15616.00 | 15640.00 |
| ஒரு கிராம் | 1,953.00 | 1,952.00 | 1,955.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 53,975.00 | 57,750.00 | 58,000.00 |
| ஒரு கிராம் | 57.75 | 57.75 | 58.00 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**மஞ்சள் (கோவை)**

| | |
|---|---|
| தனிவிரலி | ரூ.10489–11262 |
| தனிகிழங்கு | ரூ.9300–10851 |

**மக்காச்சோளம்**

| | |
|---|---|
| உடுமலை | ரூ.1070–1090 |

**பருத்தி (அன்னூர்)**

| | |
|---|---|
| எல்.ஆர்.ஏ | ரூ.6250–6450 |

**சோளம்**

| | |
|---|---|
| திருப்பூர் | ரூ.1300–1300 |

**தேங்காய்**

| | |
|---|---|
| தொண்டாமுத்தூர் | ரூ.600–700 |
| உடுமலை | ரூ.500–500 |
| நெகமம் | ரூ.500–600 |

ஊட்டி நகருக்கு தண்ணீர் வழங்கும்

# பார்சன்ஸ்வேலி அணையில் நீர்மட்டம் குறைந்தது

## குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

ஊட்டி, மார்ச்.22-

ஊட்டி நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கிய அணைகளில் ஒன்றான பார்சன்ஸ் வேலி அணையில் நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

### பார்சன்ஸ் வேலி அணை

சுற்றுலா நகரமான ஊட்டிக்கு ஆண்டு தோறும் ஏப்ரல், மே மாதங்களில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் தினமும் வருகை தருவார்கள். மேலும் இங்கு பல தரப்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள்.

ஊட்டி நகருக்கு மார்லிமந்து, டைகர் ஹில், கோரிசோலா, தொட்டபெட்டா அப்பர், கோடப்பமந்து அப்பர், தொட்டபெட்டா லோயர், கோடப்ப மந்து லோயர், ஓல்டு ஊட்டி ஆகிய உள்ளூர் அணைகளில் இருந்தும், ஊட்டி அருகே உள்ள மின் வாரியத்திற்கு சொந்தமான பார்சன்ஸ்வேலி அணையில் இருந்தும் குடிநீர் வழங்கப் படுகிறது.

### குறைய வாய்ப்பு

ஊட்டி நகருக்கு 1 எம்.ஜி.டி. 2 எம்.ஜி.டி. குடிநீர் பார்சன்ஸ் வேலி அணையில் இருந்து வழங்கப்படுகிறது. மேலும் வெலிங்டன் எம்.ஆர்.சி. ராணுவ முகாம், ராணுவ கல்லூரிகளுக்கு தனியாக குடிநீர் பார்சன்ஸ்வேலி அணையில் இருந்து தினமும் வழங்கப்படுகிறது.

தற்போது ஊட்டியில் கடும் வெயிலினால் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் வெப்பம் அதிகரித்து வருவதால், ஊட்டிக்கு குடிநீர் வழங்க கூடிய அணைகளில் நீர்மட்டம் குறைய வாய்ப்பு உள்ளது. தற்போது ஊட்டியில் குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் தினமும் ஊட்டி நகராட்சி குடிநீர் வழங்கி வருகின்றனர். ஒரு சில பகுதிக்கு மட்டும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.ஊட்டிக்கு தற்போது சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித் துள்ளது.

### தண்ணீர் திறப்பு

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதால், மின் தட்டுப்பாடு இல்லாமல் இருக்க, ஊட்டி பார்சன்ஸ் வேலி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு காட்டுக்குப்பை மற்றும் டைக்காரா மின் முகாம்களில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதனால் பார்சன்ஸ் வேலி அணையில் 17 அடி உயரத்தில் இருந்த நீர்மட்டம் தற்போது 12 அடியாக குறைந்து உள்ளது. பார்சன்ஸ் வேலி அணையில் இருந்து தண்ணீர் மேலும் திறந்து விடப்பட்டால், 12 அடியில் இருந்து குறைய வாய்ப்பு உள்ளது.

### தட்டுப்பாடு அபாயம்

8 அடியாக நீர்மட்டம் குறைந்தால், குடிநீர் பம்ப் செய்யும் பம்புகளில் சேறு, சகதி ஏறும். அப்படி ஏற்பட்டால் குடிநீர் வினியோகம் தடைபடும். இதனால் ஊட்டி குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

மேலும் ஊட்டி நகருக்கு குடிநீர் ஆதாரங்களாக உள்ள மார்லிமந்து, டைகர் ஹில், கோரிசோலை, தொட்ட பெட்டா அப்பர், கோடப்ப மந்து அப்பர், தொட்டபெட்டா லோயர், கோடப்ப மந்து லோயர், ஓல்டு ஊட்டி ஆகிய அணைகளில் குடிநீர் அளவு தற்போது போதுமான தாக இருந்தாலும், ஊட்டியில் கடும் வெப்பமும், சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும் போது, குடிநீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என நகராட்சி அதிகாரி அஞ்சுகிறார்கள்.



இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பார்சன்ஸ் வேலி அணையில் இருந்து தொடர்ந்து தண்ணீர் மின் உற்பத்திக்கு திறந்து விடாமல் தற்போதைய 12 அடி உயரத்தை குறைக் காமல் இருக்க கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் சந்தித்து விபரத்தை தெரிவித்து உள்ளனர்.இந்த விபரத்தை மின் வாரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கும்படி கேட்டு கொண்டு உள்ளனர்.

### விவரம்

தற்போது ஊட்டி நகருக்கு குடிநீர் வழங்கும் அணைகளின் நீர்மட்டம் அளவு பின்வருமாறு:-

பார்சன்ஸ்வேலி-12 அடி

மார்லிமந்து-19.50அடி

டைகர்ஹில்-34.00 அடி

கோரிசோலா-5.50 அடி

தொட்டபெட்டா அப்பர் -14.00 அடி

கோடப்பமந்து அப்பர் -5.00 அடி

தொட்டபெட்டா லோயர்-13.00 அடி

கோடப்பமந்து லோயர்-3.00 அடி

ஓல்டு ஊட்டி-5.00 அடி

தினகரன்

**20,000 மூட்டை மஞ்சள் வரத்து**

பதிவு செய்த நாள் 3/22/2011 1:36:36 AM



ஈரோடு : ஈரோடு மஞ்சள் மார்க்கெட்களுக்கு வரலாறு காணாத வகையில் நேற்று ஒரே நாளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மஞ்சள் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்தனர். மஞ்சள் விலை கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ந்து உயர்ந்து வந்ததால் கடந்த ஆண்டில் மஞ்சள் சாகுபடி ஈரோடு, சேலம், கோவை உள்பட மாநிலம் முழுவதும் இரு மடங்கு அதிகரித்தது. இதே போல கர்நாடக மாநிலத்திலும் பல மடங்கு சாகுபடி பரப்பு உயர்ந்தது. இந்நிலையில் அறுவடை செய்யப்பட்ட மஞ்சள் கடந்த ஜனவரி மாதம் முதல் ஈரோட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிமார்க்கெட், கோபி மார்க்கெட், சேலம் மார்க்கெட்களுக்கு கொண்டு வரப்படுகின்றன.

ஆனால் கடந்த ஆண்டை காட்டிலும் தற்போது விலை குறைந்து வருகின்றது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் குவிண்டால் அதிகபட்சமாக ரூ.17 ஆயிரத்திற்கு விற்றது. ஆனால், வரத்து அதிகரித்ததால் தற்போது குவிண்டால் அதிகபட்சமாக ரூ.10 ஆயிரத்து 500க்கு விற்பனையாகி வருகின்றது. விலை தொடர்ந்து சரிந்து வருவதால் அறுவடை செய்யப்பட்டுள்ள மஞ்சளை விவசாயிகள் விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் விற்பனை கூடங்களுக்கு வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

நேற்று மதியம் வழக்கம் போல ஏலம் தொடங்கியது. தொடர்ந்து மஞ்சள் மூட்டைகள் வந்து கொண்டிருந்ததால் ஏலம் மாலை 4 மணிக்கு முடிவடைந்தது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு 1843 மூட்டைகள் வரத்து இருந்தது. 1399 மூட்டைகள் விற்பனையானது. இதே போல வெளிமார்க்கெட்டிற்கு வரலாறு காணாத வகையில் 8 ஆயிரத்து 92 மூட்டைகள் வரத்து இருந்தது. விலை சரிந்ததால் 756 மூட்டைகள் மட்டுமே விற்பனையானது.

இதே போல கோபி மார்க்கெட், சேலம் மார்க்கெட்களிலும் வரத்து அதிகரித்து காணப்பட்டது. நேற்று ஒரே நாளில் ஈரோடு மஞ்சள் மார்க்கெட்களுக்கு 20 ஆயிரம் மூட்டைகள் வரத்து இருந்தது. வரத்து அதிகரித்ததால் கடந்த வாரத்தை விட மேலும் விலை சரிந்து விற்பனையாது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் ஒன்று ரூ.8009 லிருந்து அதிகபட்சமாக ரூ.10 ஆயிரத்து 489 வரையிலும் கிழங்கு ரூ.9590 வரையிலும் விற்பனையானது. இதே போல வெளிமார்க்கெட்டில் விரலி அதிகபட்சமாக ரூ.10 ஆயிரத்து 410க்கும் கிழங்கு ரூ.9 ஆயிரத்து 740க்கும் விற்பனையானது.

## குன்னூரில் தேயிலை தேக்கம்

பதிவு செய்த நாள் 3/22/2011 1:35:45 AM



குன்னூர் : குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்றது. இதற்கு 10.57 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 7.45 லட்சம் கிலோவும், டஸ்ட் 3.12 லட்சம் கிலோவும் அடங்கும். ஏற்றுமதி வர்த்தகர்கள் பங்களிப்பு குறைந்து இருந்தது. உள்ளூர் வர்த்தகமும் எதிர்பார்த்தது போல் இல்லாததால் 33 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.

அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ.3 வரை விலை சரிந்தது. வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.48&54, உயர் வகை கிலோ ரூ.85&130, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.50&55, உயர் வகை ரூ.85&140 வரையிலும் விலை போனது. சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.171, ஆர்தோடக்ஸ் ரகத்திற்கு ரூ.181 விலை கிடைத்தது.

## 2 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி?

பதிவு செய்த நாள் 3/22/2011 1:35:14 AM



புதுடெல்லி : நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளதால், கரும்பு விவசாயிகள் நஷ்டம் அடைவதைத் தவிர்க்க 2 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கும் என்று அதிகார வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான உணவுத் துறை தொடர்பான மத்திய அமைச்சரவை குழு கூட்டம் இன்று நடைபெறுகிறது.

நாட்டில் இந்த ஆண்டு உள்நாட்டு தேவைக்கும் அதிகமாக சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், கரும்பு விவசாயிகள் நஷ்டம் அடையாமல் இருக்க சர்க்கரை ஏற்றுமதியை அனுமதிப்பது குறித்து இந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்படுகிறது. பகிரங்க பொது உரிமம் அடிப்படையில் இந்த ஆண்டு 2 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கலாம் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்க்கரை ஏற்றுமதி தொடர்பாக மத்திய அமைச்சகங்களுக்கு இடையிலான கருத்து பரிமாற்றம் நடைபெற்றது. இதில், கரும்பு விவசாயிகளுக்கு உதவும் வகையில் இந்த ஆண்டு 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி தரலாம் என்று மத்திய வேளாண்மை துறை பரிந்துரை செய்துள்ளது. ஆனால், 2 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மட்டும் அனுமதி ரலாம் என்று நிதியமைச்சகம் யோசனை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், உணவுத் துறை தொடர்பான மத்திய அமைச்சரவைக் குழு கூட்டம் இன்று டெல்லியில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் வேளாண்மை துறையில் பரிந்துரை குறித்து விவாதித்து முடிவு எடுக்கப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

### கறிக்கோழி கிலோ ரூ.140

பதிவு செய்த நாள் 3/22/2011 1:36:01 AM

சேலம் : கறிக்கோழி விலை கடந்த சில நாட்களாக உயர்ந்து வருகிறது. கடந்த மாதத்தில் அதிகபட்சமாக கொள்முதல் விலை ரூ.60 வரை இருந்தது. பின்னர் இம்மாதத்தில் படிப்படியாக விலை உயர்ந்தது. நேற்று முன்தினம் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை ரூ.69 முதல் ரூ.78 ஆக இருந்தது.

நேற்று கிலோவுக்கு ரூ.2 விலை உயர்ந்து பண்ணைக் கொள்முதல் அதிகபட்ச விலை ரூ.80 ஆக அதிகரித்தது. இதனால் கறிக்கோழி சில்லரை விற்பனை விலையும் உயர்ந்துள்ளது. ஜனவரி மாதத்தில் ஒரு கிலோ கறிக்கோழி சில்லரை விற்பனையில் ரூ.90 முதல் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இது ரூ.100, ரூ.110 என படிப்படியாக விலை உயர்ந்தது. கடந்த வாரத்தில் ஒரு கிலோ கோழிக்கறி ரூ.130 வரை விற்பனை செய்யப்பட்டது. நேற்று இந்த விலையானது கிலோவுக்கு ரூ.10 கூடி ரூ.140 ஆக உயர்ந்தது.